**(CHAPTER I CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF THE I ADDITIONAL SPECIAL COURT FOR NDPS CASES, MADURAI.**
*** * * * * * * * ***

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. 1-19 |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | Tr. கார்த்திகேயன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.09.2019.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மாவட்டம் அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 5-12-2017 அன்று தேனி என்.ஐ.பி.சி.ஐ.டி. காவல் நிலையத்திலிருந்த போது தகவலாளி நிலையத்தில் ஆஜராகி கஞ்சா கடத்தி வருவதாக சொன்னதின் பேரில் உடன் வந்தால் அடையாளம் காட்டுவதாக கூறினார். தலைமை காவலர் 1630 ஈஸ்வரன் மற்றும் தலைமை காவலர் 1855 ரமேஷ் ஆகியோர் 13-10 மணிகது தகவல் பதிவு செய்து மேல் அதிகாரிக்கு தகவல் தெரிவித்தோம். சம்பவ இடம் சென்றோம். 14 மணிக்கு தகவலாளி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சிவாஜி நகர் சந்திப்பில் மஞ்சள் நிற அபே ஆட்டோ TN 60 F 8169 வாகனத்தை அடையாளம் காட்டி மறைந்து விட்டார். தலைமை காவலர் 1630 ஈஸ்வரன் அவர்கள் அவ்வாகனத்தை நிறுத்தும்பொழுது வாகன ஓட்டுநர் இறங்கி ஓடி தலைமறைவாகி விட்டார்.

ஆட்டோவின் பின்னால் அமர்ந்திருந்த நபரிடம் நாங்கள் போதை பொருள் தடுப்பு பிரிவு போலீசார் என அடையாளம் தெரிவித்து தங்களை சோதனையிட வேண்டும் என்றும் அவர் விரும்பினால் அருகில் உள்ள நடுவர் அவர்களிடமோ பதிவு பெற்ற அலுவலர் முன்னிலையிலோ சோதனை செய்ய உரிமை உள்ளது என்று தெரிவிக்க அதற்கு அவர் தேவையில்லை என்றும் தாங்களே சோதனை செய்து கொள்ளலாம் என்று தெரிவித்தார். அந்த நபரிடம் ஆஜர் எதிரி கதிர்ராஜா என்பவர் தான் பின்னர் அவரிடம் சோதனை சம்மத கடிதம் எழுதி வாங்கப்பட்டது. அதில் நானும் தலைமை காவலர் ரமேஷ் என்பவரும் எதிரியும் கையெழுத்து போட்டோம். சோதனை சமமத கடிதம் எழுதி வாங்கினோம். அந்த சோதனை சம்மத கடிதம்அ.சா.ஆ.1. பின்னர் ஆட்டோவிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த பிளாஸ்டிக் வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்தோம். அதில் உலர் கஞ்சா இருந்தது. அதை எடை போட்டு பார்த்தபோது பத்து கிலோ இருந்தது. மேற்படி கஞ்சாவிலிருநது தலா 25 கிராம் வீதம் இரண்டு மாதிரிகள் எடுத்து அவற்றை காக்கி நிற கவரில் போட்ட நூலால் கட்டி என்.ஐ.பி.சீல் வைக்கப்பட்டு அதற்கு எஸ்1, எஸ்2 என்று குறியீடு செய்யப்பட்டது. மீதமுள்ள 9.950 கிலோ கிராம் எடையுள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து சணலால் கட்டி என்.ை.பி. சீல் வைத்து பி-1 என குறியீடு செய்தோம். மேற்படி கஞ்சா, ஆட்டோ T N 60 F 8169 ஆகயவறறை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினொம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2. அதிலும் நாங்களும் எதிரியும் கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரியை கைது செய்து எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து தலைமை காவலர் ஈஸ்வரன் குற்ற எண் 205-17 சட்டப்பரிவு 8 (c) r/w 20 (b) (ii) (B) and 25 of NDPS Act படி வழக்கை பதிவு செய்தார். கைது நமூனா அ.சா.ஆ.3. ஆய்வு நமூனா அ.சாஆ. 4. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

தேனி என்.ஐ.பி.சி.ஐ.டி பிரிவில் பதினான்கு மாதங்கள் நான் பணிபுரிந்தேன். எங்கள் அலுவலகத்திலிருந்து தேனி புதிய பேருந்து நிலையம் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. தேனி புதிய பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது ஹவுசிங் போர்டு காலனியிலிருந்து தேனிக்குள் செல்ல முடியும் என்றால் சரி தான். அதே போல் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 200 மீட்டர் கடந்து வடக்கே செல்லும் பேருந்துகள் அனைத்தும் பெரியகுளம் திண்டுக்கல் வழியாக நோக்கி செல்லும் என்றால் சரி தான். தெற்கே செல்லும் ரோட்டில் உசிலம்பட்டி மதுரை பேருந்துகள் செல்லும் என்றால் சரி தான். அந்த இடத்தில் போலீஸ் சிக்னல் இருக்கும் என்ற்ால் இல்லை. புதிய பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தள்ளி உள்ள நான்கு ரோடுகள் சந்திப்பை தான் சிவாஜி நகர் பிரிவு என்றும் சம்பவ இடம் என்றும் சொல்லியுள்ளேன். அனன்ஜி விலக்கிலிருந்து பழைய பேருந்து நிலையம் செல்ல வேண்டும் என்றால் சிவாஜி நகர் பிரிவு பாதை சுற்றுப் பாதை என்றும் நேராக பொம்மையகவுண்டன் பட்டி அல்லி நகரம் வழியாக தேனி பழைய பேருந்து நிலையம் செல்லலாம் என்று சொன்னால் சரி தான். நான்கு ரோடுகள் சந்திப்பில் அருகே டீக்கடைகள் ஓட்டல்கள் ஆட்டோ ஸ்டான்டும் அங்கிருக்கிறது என்றால் சரி தான். மேற்படி பிரிவு ரோட்டில் எந்த கடை முன்பு அந்த பிரிவிலிருந்து எந்த திசையில் செல்லும் ரோட்டில் வைத்து கண்காணிப்பு நடந்தது என்று ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான். அனன்ஜி விலக்கிலிருந்து சிவாஜி நகர் பிரிவிற்கு வர வேண்டும் என்றால் புதிய பேருந்து நிலையம் வர வாகனங்கள் தெற்கு நோக்கி வர வேண்டும் என்றால் சரி தான். நான் கூறுகின்ற சம்பவ இடம் எப்பொழுதும் நபர்கள் இருக்கும் இடம் என்றால் சரி தான். நிரந்தரமாக கடை வைத்திருக்கும் நபர்களை சாட்சிகளாக இருக்க அழைத்தோம். ஆனால் அவர்கள் வரவில்லை. தலைமை காவலர் ஈஸ்வரன்

சென்று அழைத்தார். அவர் அழைத்து வர மறுத்தவர்களின் பெயர், ஊர் தெரியாது என்றால் சரி தான். 13-20 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டோம் என்றால் சரி தான். 13.45, 13.50 மணிக்கு சம்பவ இடம் சென்றோம். இந்த வழக்கில் வாகனத்தை பார்ப்பதற்கு முன்பு எத்தனை வாகனங்களை நாங்கள் சோதனை செய்தோம் என்றால் 20, 30 வண்டிகளை சோதனை செய்தோம். நாங்கள் மூன்று பேரும் தனித்தனியாக வேறு வேறு இடங்களில் நின்று கொண்டிருந்தோம். நானும் தலைமை காவலர்களும் சீருடையின்றி சாதாரண உடைகளில் தான் சென்றோம். சம்பவ இடத்தில் எதிரியிடம் எங்களை அறிமுகம் செய்து முடிக்க சுமார் 10 நிமிடங்கள் ஆனது. அதன் பிறகு தான் சோதனை சம்மத கடிதம் தயார் செய்தோம் என்றால் சரி தான். வழக்கு ஆவணங்களை தலைமை காவலர் ஈஸ்வரன் எழுதினார். எதிரி கதிர்ராஜாவிடம் அவரது உடலில் எதுவும் மறைத்து வைத்துள்ளாரா? என்று உடல் சோதனை செய்தோம். சோதனை சமமத கடிதம எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது? அதை எந்த அதிகாரி முன்னிலையில் தயார் செய்யப்பட்டது? என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்த சோதனை சம்மத கடிதத்தில் சார்பு ஆய்வாளர் என்று எழுதி கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். நானும் உடன் வந்தவர்களும் வாகனத்தின் உள்ளே சென்று வேறு ஏதும் உள்ளதா? என்று சோதனை செய்தோம். அப்போது வாகனத்தின் ஆவணங்கள் எதையும் நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் அது தவறு. ஆர்.சி.புத்தகம் காப்பீட்டு நகல் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளோம். ஆவணங்கள் கைப்பற்றப்பட்ட விவரம் அத்தாட்சியில் சொல்லப்படவில்லை. எலக்ட்ரானிக் தராசு மூலம் சொத்துக்களை எடை போட்டோம். எடை சரியாக போடப்பட்டு மாதிரி பொட்டலங்கள் தயார் செய்யப்பட்டன. கஞ்சா வைக்கப்பட்டிருந்த சாக்கு பையின் எடை நீக்கப்பட்டதாக அத்தாட்சியில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி தான். ஆட்டோவில் எந்த பகுதியில் இருந்து கஞ்சா மூட்டை கைப்பற்றப்பட்டது என்று அத்தாட்சியில்

குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரி தான். கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மீது சிலிப் ஒட்டி விவரங்கள் எழுதி ஒட்டப்பட்டது என்று சொல்லப்படவில்லை. நாங்கள் அவற்றில் கையொப்பம் செய்ததாகவும் அத்தாட்சியில் குறிப்பிடப்படவில்லை. சம்பவ இடத்திற்கு மடிக்கணிணியை கொண்டு சென்றோம். ஆனால் கணிணி மூலமாக எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. ஆவணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக தான் தயார் செய்யப்பட்டன. இரண்டரை மணி நேரம் சம்பவ இடத்தில் இருந்தோம். பொருட்களை கைப்பற்றி எடை போட்டு பார்க்கும்போது பக்கத்தில் இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள் என்றால் சரி தான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் குழுவுடன் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்திலும் 1-ம் எதிரி வரவில்லை என்றும் அவர் போதை பொருள் எதையும் எடுத்து எங்களிடம் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரி அல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது. எதிரியை அச்சுறுத்த ஆவணங்களில் கையொப்பம் பெற்று நாங்களும் கையொப்பம் இட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சார்பு ஆய்வாளர் வரவில்லை. இரண்டாம் எதிரியின் அங்க அடையாளங்கள் எந்த ஆவணத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரி தான். அத்தாட்சியில் 2-ம் எதிாயின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி தான். வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் பெர்மிட் ஆகியவை கைப்பற்றப்படவில்லை என்றால் சரி தான். 1-ம் எதிரிக்கும் 2-ம் எதிரிக்குமிடையே எந்த தொடர்புமில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஆட்டோ பின்னால் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. இரண்டாம் எதிரி சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கில்

கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் போதை பொருளுக்கும் 2-ம் எதிரிக்கும் எந்த வகையிலும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.